**செய்தி வெளியீடு எண்: 383** **நாள் : 15.07.2013**

செய்தி வெளியீடு

**மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்று,ம் இளைஞர் நலத் துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் சென்னையில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் ரூ.5 கோடி செலவில் புதியதாக குளிரூட்டுச் சாதனம் (Air Conditioner) அமைக்கப்பட உள்ள பணிகளையும் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக விளையாட்டு வீரர், வீராங்கனைகள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வெல்ல வேண்டும், அவ்வாறு அவர்கள் வெற்றி பெறுவதற்கு சிறந்த முறையில் நவீன, அறிவியல் பூர்வமான முழுமையான பயிற்சிகளை அளித்து, ஊட்டச்சத்து, ஊக்கத் தொகைகள் வழங்கி அவர்களை ஊக்குவித்து, அவர்கள் பயிற்சி பெறும் அரங்குகள் பன்னாட்டு தரத்தில் உருவாக்கிடவும், ஏற்கனவே உள்ள விளையாட்டு மைதானங்கள் / அரங்குகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், உரிய சிறப்பான திட்டங்களை மற்றும் தேவையான நிதி உதவியினை வழங்கி வருகிறார்கள். விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்கு கடந்த ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நிதி உதவி இவ்வாண்டு (2013–2014) மூன்று மடங்காக உயர்த்தி ரூ.112.50 கோடி வழங்கியுள்ளார்கள்.

ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் தற்பொழுது பழுதடைந்துள்ள குளிரூட்டுச் சாதனத்தை (Air Conditioner) மாற்றி, புதியதாக அமைத்திட ரூ.5 கோடி நிதியினை அளித்து பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள் இன்று (15–7–2013) ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் குளிரூட்டுச் சாதனம் அமைக்கப்பட உள்ள பணிகளை நேரில் பார்வையிட்டும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு செய்ய வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள். இவ்விளையாட்டரங்கில் இறகுப் பந்து மற்றும் கையுந்துப்பந்து பயிற்சி பெறும் சிறப்பு விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை விளையாட்டு மைய மாணவ – மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள், தங்கும் இட வசதிகள், மற்றும் வழங்கப்படும் சத்துணவு குறித்து கேட்டறிந்தார்கள். இந்நிகழ்வில் திரு முகம்மது நசீமுத்தீன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, திரு க. ராஜாராமன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலளார் / உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள், பொறியாளர்கள், விளையாட்டரங்க அலுவலர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**